செய்தி வெளியீடு எண். 56 நாள். 25.01.2017

**திருவள்ளூர் ஆர்.எம்.ஜெயின் சி.பி.எஸ்.இ பள்ளியில் தமிழ் வளர்ச்சித் துறை ஆட்சி மொழி பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நிறைவு விழாவில் ஆட்சி மொழித் திட்டத்தில் சிறந்து விளங்கும் அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி - கல்லூரி மணவர்களுக்கு உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் / தமிழ் வள்ர்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.**

------------

திருவள்ளூர் ஆர்.எம்.ஜெயின் சி.பி.எஸ்.இ பள்ளியில் தமிழ் வளர்ச்சித் துறை ஆட்சி மொழி பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நிறைவு விழாவில் ஆட்சி மொழித் திட்டத்தில் சிறந்து விளங்கும் அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி மணவர்களுக்கு உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் / தமிழ் வள்ர்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை இன்று (25.01.2017) வழங்கினார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது “ அரசு பணியில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இதுபோன்ற பயிலரங்கத்தில் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை தமிழ்மொழியில் வளர்த்துக்கொள்ள வேண்டும். தங்களின் தனித்திறமைகளை கவிதை, கட்டுரை மற்றும் கருத்தரங்கம் மூலமாக வெளிப்படுத்தி அதை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அரசு பணியில் உள்ள அனைவரும் தமிழ் புத்தகங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகளை பயின்று அதன் சிறப்பை உணர்ந்து நல்ல பல பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன் திருவள்ளூர் மாவட்ட உதவி இயக்குநர் திரு.தங்க காமராசு, திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி கார்குழலி, கவிஞர் தியாரு பேராசிரியர் ச.மு.சங்கவை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**